**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 61/2021 PW . 1**

**பெயர் : லெட்சுமி** **தந்தை/கணவர் பெயர்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.04.2025

---

**(1, 3 எதிரிகள் ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. 2வது எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ).**

**<u>24.04.2025 சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எனது மருமகன் பார்த்திபனின் அப்பா உடன் பிறந்தவர் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. எனது மருமகனின் அப்பா, சித்தப்பா மொத்தம் 4 பேர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு பொதுவாக ஒரு கிணறு இருந்தது என்றால் கிணறு இருந்ததாக சொன்னார்கள். பொதுக்கிணற்றை 3வது எதிரியை தவிர்த்து மற்ற சம்மந்திமார்கள் அடைத்துவிட்டது தெரியுமா என்றால் தெரியாது. அதனால் அவர்களுக்குள் பிரச்சனை இருந்தது தெரியுமா என்றால் தெரியாது. 3வது எதிரி மூர்த்தி அவர்களின் உடன்பிறந்தவர்களுடன் பேச்சு வார்த்தையில்லை என்பது தெரியும். பொதுக்கிணறு உள்ள இடத்தில் எனது மருமகன் மின்கம்பி ஊன்றி மின்இணைப்பு பெற முயற்சி செய்தார் என்றாலும் அதை கேட்டதற்கு எனது மருமகன் எதிரிகளை அடித்து தாக்கிவிட்டார் என்றால் இல்லை. 2, 3வது எதிரி என்னை உடம்பில் எந்த இடத்தில் தாக்கினார்கள் என்று முதல்விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அடித்துவிட்டதாக சொல்லியுள்ளேன். 1வது எதிரி வெட்டிய அரிவாள்மனையை எங்கிருந்து எடுத்துவந்தார் என்றால் அவர் கையில் வைத்திருந்தார். மேற்படி அரிவாளை கையில் வைத்திருப்பதை எனது முதல்விசாரணை மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பாப்பாவும், பார்த்திபனும் சண்டையை விலக்கிவிட்டதாக புகாரில் சொல்லியுள்ளேன்என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றாலும் மருமகன் மின்கம்பியை பொதுஇடத்தில் ஊன்றுகிறீர்கள் என்று கேட்டதற்கு எனது மருமகன் எதிரிகளை அடித்து தாக்கும் போது எனக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி புகாரிலிருந்து தப்பிப்பதற்காக இந்த பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என் மகளை அசிங்கமாக பேசவில்லை என்றாலும் அரிவாளால் என்னை வெட்டவில்லை என்றாலும் சரியல்ல. நானே ஏற்படுத்திக்கொண்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

மறுவிசாரணைஇல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 61/2021 PW . 2**

**பெயர் : பாப்பா** **தந்தை/கணவர் பெயர்: லெட்சுமணன்**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.04.2025

---

**(1, 3 எதிரிகள் ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. 2வது எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ).**

**24.04.2025 சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. 3வது எதிரி மூர்த்தியுடன் பிறந்தவர்கள் தான் எனது கணவர் லெட்சுமணன், சண்முகம், கருப்பையா என்றால் சரிதான். மேற்படி நால்வரில் 3வது எதிரியை தவிர மற்ற மூவரும் ஒன்றாக உள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் நான்கு குடும்பத்திற்கும் பாத்தியமான பொது கிணற்றை 3வது எதிரியை தவிர்த்து நாங்கள் மூடியதால் பிரச்சனை என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணையில் என்னை உடம்பில் எந்த இடத்தில், எந்த எதிரி தாக்கினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது முதல்விசாரணையில் மூர்த்தி சண்டையை விலக்கிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் சொல்வது போல் எதிரிகள் என்னிடம் பேசவில்லை, திட்டவும் இல்லை என்றாலும் எனது மகன் மின்கம்பியை பொதுஇடத்தில் ஊன்றுகிறீர்கள் என்று கேட்டதற்கு எனது மகன் எதிரிகளை அடித்து தாக்கும் போது எனக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அசிங்கமாக பேசவில்லை என்றாலும் என்னை அடித்து வெட்டவில்லை என்றாலும் எங்கள் மீது போடப்பட்ட வழக்கிலிருந்து தப்பிப்பதற்கு எனக்கு தானே காயத்தை ஏற்படுத்தி கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணைஇல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 61/2021 PW . 4**

**பெயர் : சண்முகம்** **தந்தை/கணவர் பெயர்: உடையன்**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.04.2025

---

**(1, 3 எதிரிகள் ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. 2வது எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ).**

**24.04.2025 சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. புகார் கொடுத்த அ.சா.1 எனது தம்பி லெட்சுமணனின் சம்பந்தி என்றால் சரிதான். அ.சா.2 லெட்சுமணின் மனைவி என்றால் சரிதான். மேற்படி நால்வரில் 3வது எதிரியை தவிர மற்ற மூவரும் ஒன்றாக உள்ளோம் என்றால் சரிதான். பொதுக்கிணற்றை மூடியதால் தான் பிரச்சனை என்றால் சரியல்ல. 3வது எதிரிக்கு பங்கு உள்ள பொதுக்கிணற்றை நாங்கள் மூடியதால் எங்களுக்குள் பிரச்சனை என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணையில் நானும், அ.சா.3 ராஜேஸ்ம் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால்சரிதான். மேற்படி விபரத்தை போலீசார்விசாரணையில்சொல்லவில்லை. எனது முதல்விசாரணையில் அ.சா.1க்கு இரத்தக்காயம் ஏற்பட்ட பிறகு தான் நான் சென்று பார்த்தேன் என்றுசொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் 3வது எதிரி மீது உள்ள பகையால் எனது சம்பந்தி லெட்சுமிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணைஇல்லை.